Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 329

புதன்கிழமை
22 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50




## கிருமித்தொற்றால் உயிரிழந்தது சிசு

யாழ்., ஒக்.22
கிருமித் தொற்றுக் காரணமாக 22 நாள் களேயான சிசு வொன்று உயிரிழந் துள்ளது.
தனியார் மருத்துவ 15

## தவறான முடிவெடுத்து இளம்பெண் உயிரிழப்பு

யாழ்., ஒக்.22
இளம் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். நாவற்குழியைச் சேர்ந்த குறித்த பெண், கடந்த 15 ஆம் திகதி 15

# வடக்கில் கனமழை சிவப்பு எச்சரிக்கை

**கொழும்பு, ஒக்.22**
**வடக்கு மாகாணத்துக்கு கனமழை பெய்வதற்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இன்று வடக்கில் கன மழை பெய்யக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.** 15

## விசேட நடவடிக்கையில் யாழில் 29 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாணத்தில்கடந்தஒரு வாரத்தில் மேற்கொள்ளப் பட்ட விசேட நடவடிக்கை யில் யாழ்ப்பாணப் பொலி ஸாரால் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை பொலி ஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையி லேயே இவர் 15



வவுனியா மாநகரசபை

## மேயர், பிரதிமேயர் பதவிகளை வகிப்பதற்கு இடைக்காலத் தடை

வவுனியா, ஒக்.22
வவுனியா மாநகரசபை யின் முதல்வர், பிரதி முதல் வர் ஆகியோர் அந்தப் பதவிகளை வகிப்பதற்கு இடைக்காலத் தடை உத்த ரவை விதித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன் றம் நேற்று உத்தரவிட் டுள்ளது.
வவுனியா மாநகரசபை 15


## மருத்துவமனை முன்பும் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந் திய இராணுவத்தால் சுட் டுக்கொல்லப்பட்டவர்களின் 38ஆவது 15

இந்தியப் படைகளின் மிலேச்சத்தனமான

## போதனா மருத்துவமனைப் படுகொலை; நேற்று உணர்வுபூர்வ நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் புகுந்த இந்திய இராணுவத் தினரால் சுட்டுக்கொல்லப் பட்ட 68 பேரின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுச் செவ் வாய்க்கிழமை யாழ்ப்பா ணம் போதனா மருத்துவ மனையில் கடைப்பிடிக்கப் பட்டது.
1987ஆம் ஆண்டு ஒக்ரோ பர் மாதம் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் இந்தப் படுகொலை நடந்தது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் புகுந்த இந்திய இராணுவம் அங்கிருந்த வர்கள் மீது 15



தனியார் காணியில் அமைக்கப்படும்

# இராணுவ மருத்துவமனைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாணம், வயாவிளானில் உள்ள தனியார் காணியில் சட்ட விரோதமாக அமைக்கப்படும் இராணுவ மருத்துவமனைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்று ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரி வித்துள்ளார்.
வயாவிளானில் உயர்பாது காப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் கையகப்ப டுத்தி வைத்திருக்கும் தனியார் காணியில் சட்ட விரோத 15



### முச்சந்தி முரளி

'எத்தினை வருசம் போனாலும் அமைதி காக்கவெண்டு வந்திட்டு செய்த அட்டூழியங்களை எங்களால மறக்கேலாது கண்டியளோ'

## இஷாராவுடன் தொடர்பு; வடக்கில் நால்வர் கைது



கொழும்பு, ஒக்.22
ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தியுடன் தொடர்புடைய நால்வர் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 15

## 0212222221 க்கு அழைப்பின் பொலிஸார் உடன் நிற்பர்!

யாழ்.நகரை மையப்படுத்தி விசேட பொலிஸ் சேவை!

விரிவு பக்கம்:- 02



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT

SLS
375


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹஎண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 21.10.2025 | திகதி 21.10.2025 | திகதி 21.10.2025 | திகதி 21.10.2025 | திகதி 21.10.2025 | திகதி 21.10.2025 | திகதி 21.10.2025 | திகதி 21.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4231 | சீட்டிழுப்பு இலக்கம் 1298 | சீட்டிழுப்பு இலக்கம் 0257 | சீட்டிழுப்பு இலக்கம் 2337 | சீட்டிழுப்பு இலக்கம் 5989 | சீட்டிழுப்பு இலக்கம் 2019 | சீட்டிழுப்பு இலக்கம் 0564 | சீட்டிழுப்பு இலக்கம் 0105 |
| ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கினம் சிம்மம் | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கினம் விருச்சிகம் |
| | | | சுப்பர் இலக்கம் 16 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 03 09 22 56 | வெற்றி இலக்கங்கள் 22 25 53 62 | வெற்றி இலக்கங்கள் 7 2 4 0 | வெற்றி இலக்கங்கள் 02 12 18 49 | வெற்றி இலக்கங்கள் 8 1 5 1 8 6 | வெற்றி இலக்கங்கள் 02 05 24 49 | வெற்றி இலக்கங்கள் 5 1 8 6 | வெற்றி இலக்கங்கள் 04 11 36 |
| விசேட எழுத்து Q | | | | | விசேட எழுத்து F | | |

# 0212222221 க்கு அழைப்பின் பொலிஸார் உடன் நிற்பர்!

## யாழ்.நகரை மையப்படுத்தி விசேட பொலிஸ் சேவை!



**யாழ்ப்பாணம்,ஒக்.22**

**போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் சிறுகுற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடன், யாழ்ப்பாணம் நகரை மையமாகக் கொண்ட பொலிஸாரின் விசேட சேவை நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.**

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில், யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமஹா குறித்த சேவையை ஆரம்பித்துவைத்தார்.

0212222221 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முறையிடுவதன் மூலம், பொலிஸார் குறித்த பகுதிக்கு விரைந்து, பிரச்சினைகளைத் தீர்ப்பர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமஹா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள எந்தப் பகுதியிலிருந்தும் குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பெடுத்து முறையிட முடியும்.

அந்தந்தப் பகுதிப் பொலிஸ் நிலையங்கள் ஊடாகப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-க-66,28,26)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 21.10.2025 | செவ்வாய்க்கிழமை | 0697 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| K | 4 3 4 6 2 3 |

## Super Ball DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 21.10.2025 | செவ்வாய்க்கிழமை | 2963 | W | 18 33 43 47 |

## சனிதா DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 21.10.2025 | செவ்வாய்க்கிழமை | F | 13 26 45 78 | 5024 |

## SASIRI DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 21.10.2025 | செவ்வாய்க்கிழமை | 0796 | 19 24 30 |

## லக்ன ராசி DLB

| திகதி | தினம் | விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 21.10.2025 | செவ்வாய்க்கிழமை | ♏ | 02 24 39 58 | 4675 |

## KAPRUKA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 21.10.2025 | செவ்வாய்க்கிழமை | A | 12 | 09 12 33 47 | 2139 |

## அத கோடிபதி DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 21.10.2025 | செவ்வாய்க்கிழமை | D | 11 35 60 69 | 2789 |



## அமைச்சுகளின் பொறுப்பு திருத்தப்பட்டு வர்த்தமானி

கொழும்பு, ஒக்.22


அமைச்சுகளின் பொறுப்புகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் அண்மைய அமைச்சரவை மறுசீரமைப்பைத் தொடர்ந்து அமைச்சுகளின் பொறுப்புகள் மற்றும் செயற்பாடுகள், துறைகள், சட்டரீதியான அமைப்புகள் என்பன திருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஹரின், சாகலவுக்கு ஐ.தே.க. முக்கியத்துவம்



கொழும்பு, ஒக்.22

ஐக்கிய தேசியக் கட்சியால் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் இரு புதிய பிரதான பதவிகள் முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்கவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஹரின் பெர்னாண்டோவை அரசியல் அணிதிரட்டல் பிரதிச் செயலாளர் நாயகமாக நியமிக்க கட்சி தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சாகல ரத்நாயக்க அரசியல் பிரசார மையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் காலங்களில் நடைபெறும் எந்தவொரு தேர்தலினதும் அனைத்து நடவடிக்கைகளையும் நிர்வகிப்பதே சாகல ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட புதிய பதவியாகும். (ச-இ)



## நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, ஒக்.22

நாட்டில் தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக தப்போவ நீர்த்தேக்கத்தின் 4 வான்கதவுகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தெதுரு ஓயா, இராஜாங்கனை நீர்த்தேக்கம், அங்கமுவ மற்றும் கலாவெவ ஆகியவற்றின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நீர்த்தேக்கங்களை அண்மித்த தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-இ)

## வீழ்ச்சியுறும் வாகன விலை



கொழும்பு, ஒக்.22

ஜப்பானில் வாகன விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை 15 இலட்சம் ரூபா வரை குறைவடைந்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரின்சிகே தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்படாத வாகன இறக்குமதிகள் உள்ளூர் சந்தையில் பதிவுசெய்யப்படாத வாகனங்களின் தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனால் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2025 ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கு இடையில் தனிப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக 705 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயநிதியத்திடம் சிக்குண்ட

# நாடுகளின் பட்டியலில் இலங்கை 13ஆவது இடம்




**கொழும்பு, ஒக்.22**
**சர்வதேச நாணயநிதியத்திடம் அதிகப்படியான தொகையைக் கடனாகப் பெற்று, அதைத் திருப்பிச் செலுத்தவேண்டியுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை 13ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.**

உலகெங்கிலும் உள்ள 86 நாடுகள் மொத்தமாக சுமார் 162 பில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியத்துக்குச் செலுத்தவேண்டியுள்ளன.

இதில், இலங்கை செலுத்த வேண்டியுள்ள தொகை 2.3 பில்லியன் அமெரிக்க டொலராகும். இந்தக் கடன் பட்டியலில் ஆர்ஜென்டினா முதலிடத்தில் உள்ளது. அந்த நாடு 56.83 பில்லியன் அமெரிக்க டொலரைச் செலுத்தவேண்டியுள்ளது.

உக்ரைன் 14.13 பில்லியன் டொலருடன் இரண்டாவது இடத்திலும், எகிப்து 9.38 பில்லியன் டொலருடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. இலங்கைக்கு முன்னால் பாகிஸ்தான், ஈக்வடோர், ஐவரிகோஸ்ட், கென்யா, பங்களாதேஷ், கானா, அங்கோலா, கொங்கோ மற்றும் கோஸ்டாரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. (ச-இ)

## ஆசிரியர்களுக்கு உளவியல் பயற்சி!

கொழும்பு, ஒக்.22
மாணவர்கள் மத்தியில் நிலவும் மன அழுத்தத்தைக் குறைக்க தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பட்டம் பெறும் அனைத்து ஆசிரியர்களுக்கும் உளவியல் பயிற்சியை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக கொழும்பு ஊடகமொன்றுக்குப் பேட்டியளித்த அமைச்சின் செயலாளர் நலகா கலுவேவா,

நாட்டில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் தேசிய கல்வியியற் கல்லூரிகள் மூலம் வருகிறார்கள். எனவே, அவர்களின் ஆசிரியர் கல்வியின் ஒரு பகுதியாக உளவியல் பயிற்சியை அறிமுகப்படுத்த அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். இதேவேளை இலங்கையில் 60 வீத பாடசாலை மாணவர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், உயர்தரங்களில் உள்ள 24 வீத மாணவர்கள் குறிப்பிடத்தக்க அறிகுறிகளைக் காட்டுகின்றனர் எனவும் அண்மைய ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## யாழ்.முற்றவெளியில் பொலித்தீன் தேக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்.முற்றவெளிப் பிரதேசம் பொலித்தீன்களால் தேங்கிக் காணப்படுகிறது.

தீபாவளியை முன்னிட்டு முற்றவெளியில் போடப்பட்ட நடைபாதை வியாபரக்கடைகளில் பயன்படுத்தப்பட்ட பொலித்தீன்களே இவ்வாறு நாலாபக்கமும் வீசப்பட்ட நிலையில் காணப்படுன்றன.

பொலித்தீன்களைப் பொது இடங்களில் வீச வேண்டாம் என மாநகராட்சி மன்றத்தால் அறிவுறுத்தப்பட்டபோதிலும் பொதுமக்கள் உதாசீனமாக செயற்படுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ச-25. 17)



## ஹிக்கடுவையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஒக்.22
காலி, ஹிக்கடுவை, மஹவத்தப் பிரதேசத்தில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் வீடொன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டின்போது எவருக்கும் எந்த விதக் காயங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவிப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம்,ஒக்.22
நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்கு, புதிய உதவிப் பிரதேச செயலராக இராமலிங்கம் சிவகரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம், நியமனக்கடிதத்தை நேற்றுப் பெற்றுக்கொண்டார்.

இவர் இதற்கு முன்னர் பொது நிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளராகக் கடமையாற்றினார். இன்று புதன்கிழமை நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் தனது கடமைகளை அவர் பொறுப்பேற்கவுள்ளார். (க-66)






## என்ன நடந்தது சந்திரிகாவுக்கு?

இரவில வேளைக்கு நித்திரை கொள்ளுற பழக்கம் இருந்தால் சோலி சுரட்டு இல்லை. ஆனால் இப்பவெல்லாம் பேஸ்புக், வட்ஸ் அப், ரிக்ரொக் , யூரியூப் எண்டு சோசல் மீடியாக்களோட எல்லாரும் மினக்கெடுறதால வேளைக்கு நித்திரை கொள்ளுற பழக்கம் குறைஞ்சு கொண்டே வருகுது. ஆனால் உதுகளைப் பார்க்காமல் வேளைக்குப் படுத்தால் தேவையில்லாத ரென்சனில்லாமல் தப்பலாம் . அதுக்கு நாலைஞ்சு நாளைக்கு முதல் நடந்த ஒரு சம்பவமே சாட்சி.

மூண்டு நாளைக்கு முதல் இரவு பதினொரு மணி போல பேஸ்புக்கிலையும், ருவிற்றரிலையும் ஒரு தகவல் காட்டுத்தீ மாதிரி பரவத் தொடங்கிச்சுது. "முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா செத்துப்போட்டா" இதுதான் அந்தத் தகவல். எல்லாரும் சந்திரிகா செத்திட்டா எண்டதை கண்ணைமூடிக்கொண்டு பரப்பிக்கொண்டிருந்திச்சினமே தவிர, எங்க செத்தவா , ஏன் செத்தவா எண்ட விவரம் ஒண்டும் போடேலை. அப்பிடி ஆதாரமொண்டுமில்லை எண்டதால பார்த்தவுடனேயே அது வதந்தி எண்டு தெரிஞ்சாலும், கனபேர் "சிலவேளை அப்பிடி நடந்திருக்குமோ?" எண்டு சந்தேகப்படவும் தொடங்கிட்டினம். உடனேயே சிலர் மீடியாக்காரருக்கும் அந்தச் சாமத்தில எடுத்து "ஏன் உப்பிடி ஒரு தகவல் பரவுது? அது உண்மையா,பொய்யா?" எண்டு கேட்டிருக்கினம்,. ஆனால் மீடியாக்காரராலையும் அந்த நேரத்தில அவை கேட்ட விசயத்தை உறுதிப்படுத்தமுடியேலை. ஏனெண்டால் நேரம் சாமம் எண்டதால, சந்திரிகாவோ இல்லாட்டி அவாக்கு நெருக்கமான ஆக்களோ போன் எடுத்தாலும், ஆன்ஸர் பண்ணேலை.அதை மற்றவை வேற மாதிரி எடுத்திட்டினம். "பேஸ்புக்கில வாற தகவல் உண்மைதான் போல, அதுதான் ஒருத்தரும் போன் எடுக்கினமில்லை" எண்டு நினைச்சுக்கொண்டு. இன்னும் வேகமா அந்தத் தகவலைப் பரப்பிறதில முழு வீச்சோட இறங்கிட்டினம். ஆனால் விடிஞ்ச பிறகுதான் அப்பிடி இரவிரவாப் பரவினதெல்லாம் வதந்தி எண்டு தெரிய வந்திருக்குது.

அப்ப ஏன் சும்மா இருந்த சந்திரிகா செத்திட்டா எண்டு ஏன் வதந்தி பரப்பினவை எண்டுதான் ஒருத்தருக்கும் இன்னும் தெரியேலை. இத்தனைக்கும் சந்திரிகா இதுவரைக்கும் வருத்தமாவும் இருக்கேலை. நல்ல திடகாத்திரமா லண்டனில இருக்கிற மகள் வீட்டுக்கும், கொழும்புக்கும் அடிக்கடி ஓடியாடித் திரியிறவாவை, 'ஆள் முடிஞ்சுது' எண்டு சொல்லுறதுக்கும் ஒரு நோக்கம் இருக்கோணுமெல்லோ. இப்ப கொஞ்சநாளா, திசைகாட்டி அரசாங்கத்துக்கு எதிரா சந்திரிகா கடுமையா வேலை செய்து கொண்டிருக்கிறாவாம். மஹிந்த, ரணில், சஜித் எண்ட மூண்டுபேருமே இப்ப சந்திரிகாவோட நல்லமாதிரி. ஆனால் இந்த மூண்டுபேரும் தங்களுக்குள்ள கொழுவுப் பாடுதான். அதால இந்த மூண்டு தரப்பையும் ஒண்டாக்கிறதுக்கு " எல்லாருக்கும் பொதுவான சந்திரிகா தான் சரியான ஆள்" எண்டு, வெளிநாட்டுத் தரப்பொண்டு அவாவைக் களத்தில இறக்கிவிட்டிருக்காம். எப்பிடி முந்தி மஹிந்தவை விழுத்த சந்திரிகா களத்தில இறங்கி, மைத்திரியையும், ரணிலையும் ஒண்டாக்கினவோ அதேமாதிரி இப்ப திசைகாட்டியை விழுத்தவும் சந்திரிகாதான் முன்னுக்கு நிக்கிறவாம். அந்தக் கடுப்பிலதான் இப்பிடியொரு தகவல் திசைகாட்டிக்காரரால பரப்புப்பட்டதெண்டும் ஒரு கதை அடிபடுகுது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வெளியில் அலையவேண்டிவரும்.



**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்லவும்.



**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் குறையக்கூடும்.



**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வெளியூரில் இருக்கும் நண்பர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.



**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக் கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.



**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கநேரிடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் நீண்டநாள்களாகக் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.



**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.



**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சுவார்த்தை சாதகமாகும்.



**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் –மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.



**மகரம்:** கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.



**கும்பம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைப்பது இழுபறியாகும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.



**மீனம்:** உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# LOLC அல் பலாஹ் மேம்படுத்தப்பட்ட சர்வதேச டெபிட் கார்டுடன் சேமிப்புக் கணக்குகளை மேம்படுத்துகிறது



ஷபின் இக்பால், முகாமையாளர் நிறுவன சந்தைப்படுத்தல்



LOLC அல் பலாவின் மாற்று நிதி சேவைகளின் தலைவர் ஷிராஸ் ரிஃபாய்

இலங்கையில் முன்னணி இஸ்லாமிய நிதி சேவை வழங்குநராக தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தும் ஒரு புரட்சிகரமான முயற்சியாக, LOLC பைனான்ஸின் மாற்று நிதி சேவைகள் பிரிவான LOLC அல் பலாஹ், அதன் புதிய மேம்படுத்தப்பட்ட சர்வதேச டெபிட் கார்டை மீண்டும் அறிமுகப்படுத்துவதை பெருமையுடன் அறிவிக்கிறது. இந்த சமீபத்திய சலுகை இஸ்லாமிய வங்கியின் கொள்கைகளுக்கு உண்மையாக இருக்கும் அதேவேளையில் மேம்பட்ட வசதி, பாதுகாப்பு மற்றும் நிதி அதிகாரமளிப்பை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட LOLC அல் பலாஹ் சர்வதேச டெபிட் அட்டை, EMV சிப் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது, இது ஒவ்வொரு பரிவர்த்தனையும் மறைகுறியாக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்கிறது, உள்ளூர் மற்றும் சர்வதேச பரிவர்த்தனைகளைச் செயலாக்கும் அதே வேளையில், வாடிக்கையாளர்கள் உடல் மற்றும் டிஜிட்டல் நிதி நிலப்பரப்புகளில் செல்லும்போது அவர்களுக்கு மன அமைதியை அளிக்கிறது. இந்த அட்டை இரட்டை இடைமுகம் கொண்ட விசா டெபிட் அட்டையாகும், இது வாடிக்கையாளர்கள் பல்வேறு உள்ளூார் மற்றும் சர்வதேச கட்டண தளங்களில் தொடர்பு மற்றும் தொடர்பு இல்லாத பரிவர்த்தனைகளைச் செய்ய அனுமதிக்கிறது. இரட்டை நெட்வொர்க் செயல்பாட்டுடன், வாடிக்கையாளர்கள் இப்போது ATM சேவைகளை அணுகலாம் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேசளவில் டெபிட் கார்டு பரிவர்த்தனைகளைச் செய்யலாம். இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைத்து VISA வணிக விற்பனை நிலையங்களிலும் இந்த அட்டை ஏற்றுக்கொள்ளப்படுகிறது, இது பயணர்களுக்கு வசதியான மற்றும் எல்லையற்ற கட்டணத் தீர்வை வழங்குகிறது.

LOLC அல்ஃபலாஹ்வின் டெபிட் கார்டு பயன்படுத்துவதற்கு செலவு குறைந்ததாகும், மேலும் சந்தையில் உள்ள ஒரே டெபிட் கார்டு இதுவாகும், இதில் பூஜ்ஜிய இணைப்புக் கட்டணங்கள், வருடாந்திர கட்டணங்கள், ஏடிஎம் திரும்பப் பெறும் கட்டணங்கள் மற்றும் பயன்பாட்டிற்கான மறைக்கப்பட்ட பரிவர்த்தனை கட்டணங்கள் ஆகியவை அடங்கும், இது கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அவர்களின் உண்மையான கணக்கு இருப்பை முழுமையாக அணுக அனுமதிக்கிறது. வாடிக்கையாளர்கள் அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் நிகழ்நேர எஸ் எம்.எஸ் எச்சரிக்கைகள், 100 க்கும் மேற்பட்ட வணிகர்களுடன் வரிசையாக பிரத்தியேகத் தள்ளுபடிகள் மற்றும் சிறப்பு சலுகைகள் மூலம் பயனடையலாம், இந்த அட்டையை ஒரு நடைமுறை மற்றும் பலனளிக்கும் நிதி கருவியாக நிலைநிறுத்துகிறது.

இலங்கை முழுவதும் தற்போதுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் புதிய வாடிக்கையாளர்களின் வங்கி அனுபவத்தை மேம்படுத்துவதற்கான LOLC அல் பலாஹ்வின் பரந்த மூலோபாயத்தின் முக்கியமான அங்கமாக புதிய டெபிட் கார்டின் அறிமுகம் உள்ளது. இந்த அட்டை நெறிமுறை மற்றும் பொறுப்பான செலவினங்களை ஊக்குவிக்கிறது, அதே நேரத்தில் நிதி உள்ளடக்கத்தை விரிவுபடுத்துகிறது, குறிப்பாக வசதி குறைந்த மற்றும் கிராமப்புற சமூகங்களில். இது அதன் விரிவான கிளை வலையமைப்பு மூலம் டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான அணுகலை வழங்குகிறது, புவியியல் அல்லது வருமானத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் மதிப்புகளுடன் இணைந்த முறையில் நவீன, பாதுகாப்பான வங்கியை உறுதி செய்கிறது.

இந்த மைல்கல் அறிமுகம் குறித்து தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட LOLC அல் பலாஹ்வின் மாற்று நிதி சேவைகளின் தலைவர் திரு. ஷிராஸ் ரெஃபாய், "ஒருவரின் நம்பிக்கைகள் மற்றும் தார்மீக விழுமியங்களுக்கு உண்மையாக இருந்துகொண்டு, ஒருவரின் நிதியைத் திறம்பட நிர்வகிப்பது அவசியம். LOLC அல்ஃபலாவில், எங்கள் வாடிக்கையாளர்கள் தங்கள் நம்பிக்கையை சமரசம் செய்யாமல் நிதி சுதந்திரத்தைத் தொடர உதவுவதில் நாங்கள் நீண்ட காலமாக நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த டெபிட் கார்டு மேம்படுத்தலின் மூலம், ஒரு உள்ளடக்கிய, நெறிமுறை மற்றும் அணுகக்கூடிய நிதி சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை நோக்கி நாங்கள் மற்றொரு படியை எடுத்துவைக்கிறோம், அங்கு ஒவ்வொரு இலங்கையரும், அவர்கள் ஒரு அனுபவமிக்க முதலீட்டாளராக இருந்தாலும், சிறு வணிக உரிமையாளராக இருந்தாலும் அல்லது தினசரி ஊதியம் பெறுபவராக இருந்தாலும், செழிக்கத் தேவையான கருவிகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கொண்டுள்ளனர். எங்கள் அர்ப்பணிப்பு சேவைகளை வழங்குவதை விட மிக அதிகம் நாங்கள் உறவுகளை உருவாக்குகிறோம். தேவைப்படும் நேரங்களில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவாக நிற்கிறோம், ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி அணுகலை நோக்கி அவர்களை வழிநடத்துகிறோம் மற்றும் சுரண்டல், ஒழுங்குபடுத்தப்படாத கடன் நடைமுறைகளிலிருந்து விலகி இருக்கிறோம். கல்வி முயற்சிகள் மற்றும் நிதி கல்வியறிவு திட்டங்கள் மூலம் சமூகங்களில் முதலீடு செய்கிறோம், எல்லாவற்றிலும் மிகப்பெரிய செல்வமான அறிவை அவர்களுக்கு வழங்குகிறோம். இந்த மேம்படுத்தப்பட்ட டெபிட் கார்டின் அறிமுகம் ஒரு கட்டணக் கருவியை மட்டுமல்ல, அனைவருக்கும் நிதி கண்ணியம், உள்ளடக்கம் மற்றும் நிலையான செழிப்பை நோக்கிய அர்த்தமுள்ள பாய்ச்சலைக் குறிக்கிறது."

இதனுடன், நிறுவன சந்தைப்படுத்தல் முகாமையாளர் திரு. ஷபின் இக்பால் கூறுகையில், "எங்கள் மறுபெயரிடப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட உயர் தொழில்நுட்ப டெபிட் கார்டை அறிமுகப்படுத்துவதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது பாதுகாப்பான, வசதியான மற்றும் உள்ளடக்கிய நிதி சேவைகளை வழங்குவதில் ஒரு திருப்புமுனையாகும். தொழில்நுட்பம் சார்ந்த, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதி நிறுவனமாக மாறுவதற்கான எங்கள் வர்த்தகநாமத்தின் தொடர்ச்சியான மாற்றத்தில் இந்த அறிமுகம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. அதன் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு அப்பால், இந்த அட்டை LOLCஅல்ஃபலாவின் முக்கிய வர்த்தகநாம மதிப்புகளான நம்பிக்கை, புதுமை மற்றும் சமூகப் பொறுப்பை எடுத்துக்காட்டுகிறது. டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலம், வசதியற்ற சமூகங்கள் முறையான பொருளாதாரத்தில் மிகவும் தீவிரமாக பங்கேற்க நாங்கள் அதிகாரம் அளிக்கிறோம். இது தனிப்பட்ட நிதி வலுவூட்டலுக்கு மட்டுமல்ல, மேம்பட்ட நிதி உள்ளடக்கம் மற்றும் பொருளாதார மேம்பாடு மூலம் பரந்த சமூக முன்னேற்றத்திற்கும் பங்களிக்கிறது. நிதி சேவைகள் சமூகத்தை ஆதரிக்கும் மற்றும் மேம்படுத்தும் விதத்தை மாற்றுவதில் எங்கள் அர்ப்பணிப்புடன், புதிய டெபிட் கார்டு இந்த தொலைநோக்கு பார்வையை உணர்ந்து கொள்வதில் ஒரு முக்கிய படியாகும், நாங்கள் சேவை செய்யும் சமூகங்கள் முழுவதும் அதிக பொருளாதார பங்களிப்பை வளர்க்கும் அதே வேளையில், வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிதிகளை நிர்வகிக்க பாதுகாப்பான, சிறந்த வழியை வழங்குகிறது.

LOLC அல்ஃபலாஹ் டெபிட் கார்டு இப்போது நாடு முழுவதும் உள்ள 200க்கும் மேற்பட்ட டுழுடுஊ கிளைகளிலும் கிடைக்கிறது. இந்த அறிமுகமானது, அனைத்து தரப்பு மக்களுக்கும் சேவை செய்யும், அர்த்தமுள்ள தாக்கம், நம்பிக்கை மற்றும் முன்னேற்றத்தை உருவாக்கும் முழுமையான மற்றும் புதுமையான மாற்று நிதி தீர்வுகளை வழங்குவதற்கான LOLCஅல்ஃபலாஹ்வின் உறுதியான நோக்கத்தின் மற்றொரு அத்தியாயத்தைக் குறிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

மற்றொரு சிந்தனையைத் தேர்வு செய்து கொள்வதற்கான நமது திறனே, மன அழுத்தத்திற்கு எதிரான மிகப்பெரிய ஆயுதம்.


– வில்லியம் ஜேம்ஸ் –


# பொன்சேகாவும் போர்க்குற்றங்களும்...!

'இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட விடயத்தில், முன்னாள் இராணுவப் பிரதானி கபில ஹெந்த விதாரணவின் குழுவுக்கு நெருங்கிய தொடர்புள்ளது' என்று தெரிவித்திருக்கின்றார் முன்னாள் இராணுவத் தளபதியான பொன்சேகா. இறுதிப்போரின்போது சரணடைந்த பொதுமக்கள் மற்றும் புலிகளில் பலரை முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய தலைமையிலான குழுவினர் சுட்டுக் கொன்றனர் என்றும் கூறியிருக்கின்றார் அவர். இறுதிப்போரில் இடம்பெற்ற விடயங்கள், இராணுவத்தினரின் போர்க்குற்றங்கள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல்கள் தொடர்பில் பொன்சேகா தொடர்ச்சியாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றார். அந்தக் கருத்துகளின் நீட்சியாகவே தற்போதைய கூற்றுகளும் அமைந்துள்ளன.

பொன்சேகா ஒன்றும் சாதாரணமானவர் அல்லர். அவர் இறுதிப்போரை வழிநடத்திய போர்த்தளபதி. எனவே, அவருடைய கருத்துகள் ஒவ்வொன்றையும் போர்க்குற்றங்களுக்கான கனதியான சாட்சியமாக கொள்ளவேண்டியது அவசியம். அவர் மஹிந்த தரப்பினர்மீதான அதிருப்தியால் இந்தக்கருத்துகளைக் கூறுகின்றாரா? அல்லது இராணுவத்தளபதியாக இருந்த தன்னை, பதவியில் இருந்து நீக்கி சிறைக்குள் அடைத்த ஆவேசத்தில் கதைக்கின்றாரா? என்பதெல்லாம் இப்போது விடயமல்ல. மாறாக, அவர் கூறவரும் - கூறும் கருத்துகளே இங்கு பிரதானமானவை. எனவே, இந்த விடயத்தில் காத்திரமான விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் முன்வர வேண்டும். நாடாளுமன்ற சிறப்புரிமைக்கு அப்பாற்பட்டு- பொதுவெளியில் - ஊழல் மோசடிகள் தொடர்பில் எவரேனும் ஏதேனும் கருத்துகளைக் கூறினால், அந்தக் கருத்துகளுக்காக அவர்களைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைக்காக அழைக்கின்றனர். ஊழல் மோசடிகளுக்கு எதிரான விசாரணைப் பொறிமுறைகள் அவ்வளவு இறுக்கமாகப் பின்பற்றப்படும்போது, போர்க்குற்றங்களுக்கு எதிரான விசாரணைகள் நிச்சயம் அதைவிட மேம்பட்ட கட்டத்தில்தான் இருக்கவேண்டும். ஆனால், தனியுலகத்தில் இருப்பவர்போன்று பொன்சேகா யூடியூப் தளங்களிலும், சமூக வெளிகளிலும் கருத்துகளை முன்வைத்து வருகின்றார். எனினும், அரசாங்கம் அவர் வெளிப்படுத்தும் போர்க்குற்றங்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், வாய்மூடி மௌனியாக அவரை வேடிக்கை பார்ப்பதையே வழக்கமாக்கிவிட்டது.

போர்க்குற்றங்கள் தொடர்பில் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் பொன்சேகா, 'விசாரணைகள் உள்ளக மட்டத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டும்' என்றும் வலியுறுத்தத் தவறவில்லை. எனவே, ஸ்ரீலங்கா அரசாங்கம் தான் மேற்கொள்ளவுள்ள உள்ளகப் பொறிமுறைக்கு ஒரு துருப்புச்சீட்டாக பொன்சேகாவைப் பயன்படுத்த எத்தனிக்கின்றதா என்ற சந்தேகமும் எழவே செய்கின்றது. உள்ளகப் பொறிமுறைக்குள் அனைத்தையும் வைத்துப் பூசிமெழுகிப் பூட்டிவிடும் நகர்வுக்காகத்தான் பொன்சேகா இவ்வளவுதூரம் குத்திமுறிகின்றார் என்றால், போர்க்குற்றம் தொடர்பில் பொன்சேகாவால் விரல் நீட்டப்படும் நபர்களுக்கும் பொன்சேகாவுக்கும் இடையில் அவ்வளவு பெரிய வேறுபாடுகள் இல்லை. எந்தநிலையிலும் - எந்தக் காரணத்துக்காகவும், 'சர்வதேச விசாரணை' என்ற நிலைப்பாட்டில் இருந்து தமிழர்கள் இறங்கிவரப் போவதில்லை.



# வழமைக்குத் திரும்பிய அரச இணைய சேவைகள்

**கொழும்பு, ஒக். 22**

**'இலங்கை அரச கிளவுட்' சேவையில் ஏற்பட்டிருந்த சிக்கல் நிலை தற்போது முழுமையாகத் தீர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச்சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.**

குறித்த சிக்கல் நிலை காரணமாக முடங்கியிருந்த அனைத்து அரச இணைய சேவைகளையும் நேற்று முதல் பொதுமக்கள் வழக்கம் போல் பயன்படுத்த முடியும் என அதன் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கை அரச கிளவுட்' சேவையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, பல அரச நிறுவனங்களால் இயக்கப்படும் இணைய சேவைகள் கடந்த ஒரு வார காலமாக செயலிழந்திருந்தன. இந்தநிலையில் சுமார் 34 அரச நிறுவனங்களின் சேவைகள் இவ்வாறு ஒரு வாரத்துக்கும் மேலாக பாதிக்கப்பட்டிருந்ததாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 22

இந்த ஆண்டின் ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில், வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான வரவுகள் 827 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளதாக இலங்கை முதலீட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இதில் முதலீடுகளுக்காக பெறப்பட்ட வெளிநாட்டு வணிகக் கடன்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், இது 138 சதவீதம் அதிகரிப்பைக் காட்டுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

மாற்றுத்திறனாளருக்கான

# அரச வேலைகள் ஒதுக்கீடு உயர்வு

கொழும்பு, ஒக். 22

விசேட தேவையுடையோருக்கான வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் அரச துறையில் தற்போதுள்ள 3 சதவீத இட ஒதுக்கீட்டை 4 சதவீதமாக அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக, தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க அறிவித்துள்ளார்.

விசேட தேவையுடையோரின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் பல கொள்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அரச மற்றும் தனியார் வேலைவாய்ப்புத்துறைகள் இரண்டிலும் அவர்களின் உள்ளடக்கத்தை உறுதிசெய்வதில் உறுதியாக இருக்கின்றது என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

# கீரிச் சம்பா விலை திடீர் உயர்வு

கொழும்பு, ஒக். 22

இலங்கையில் கீரிச் சம்பா அரிசியின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது.

சந்தையில் ஒரு கிலோகிராம் கீரி சம்பா அரிசியின் விலை 350 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# வத்திக்கான் அமைச்சர் இலங்கை வருகை



கொழும்பு, ஒக். 22

வத்திக்கான் வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்தத் தகவலை வெளியிட்டார். அவரின் இலங்கை பயணத்தின்போது சில ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)



நாளை
வியாழக்கிழமை - ஐப்பசி 6
23.10.2025
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரற்ற காலநிலை:

# 144 குடும்பங்கள் பாதிப்பு மூன்று மரணங்கள் பதிவு

கொழும்பு, ஒக்.22

**நாட்டில் நிலவும் பலத்த மழையுடன் கூடிய காலநிலை காரணமாக 144 குடும்பங்களைச் சேர்ந்த 585 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.**

இலங்கைக்குக் கிழக்காக விருத்திய டைந்த கீழ் வளிமண்டலத் தளம் பல் நிலை ஒரு குறைந்த அழுத் தப் பிரதேசமாக விருத்தியடை யக்கூடியு சாத்தியம் காணப்படு கின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வடக்கு மாகாணங் களில் இடியுடன் கூடிய மழை பெய் யக்கூடிய சாத்தியம் காணப்படுகின் றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. அத்துடன் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மலை யகத் தொடருந்து மார்க்கத்தில் திட்ட மிடப்பட்டிருந்த தொடருந்து சேவை கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. கோட்டை தொடருந்து மார்க்கத்தில் மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளமையா லேயே தொடருந்து சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அத்து டன் கனமழை காரணமாக கொழும் பில் பல வீதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள் ளது. மேலும் மஹா ஓயா மற்றும் தெதுரு ஓயாவின் தாழ்வான பகுதிக ளுக்கு வெள்ள அபாய முன் னெச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், தற்காலிகமாக அதிக ரித்து வீசக்கூடிய பலத்த காற்று மற் றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத் துக்கொள்ளத் தேவையான முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களை வளி மண்டலவியல் திணைக்களம் அறி வுறுத்தியுள்ளது. (ச-இ)



## விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், ஒக்.22

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகம் வாழ்வகம் நிறுவ னம், சுன்னாகம் லயன்ஸ் கழகம் ஆகி யன இணைந்து நடத்திய விழிப்புணர்வு நடைபவனி சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சுன்னாகம் வாழ்வக நிறுவனம்வரை கடந்த சனிக் கிழமை இடம்பெற்றது. சுன்னாகம் வாழ் வக நிறுவனத் தலைவர் ஆறுமுகம் ரவீந் திரன் தலைமையில் இடம்பெற்ற நடை பவனிக்கு சுன்னாகம் பொலிஸ் நிலை யத்தினர் அனுசரணை வழங்கினர்.

நிகழ்வில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி எம்.எவ்.எம்.பிர்டவுஸ், சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர், சுன்னாகம் வாழ் வக நிறுவன மாணவர்கள், வாழ்வக நிறு வன உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். நடைபவனி நிறை வுற்றதைத் தொடர்ந்து சுன்னாகம் வாழ் வக நிறுவன மண்டபத்தில் விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-41-66)

## கந்தசஷ்டி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஒக்.22

கந்தசஷ்டி விரதம் இன்று புதன்கி ழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சூரசம் ஹாரத்துடன் நிறைவுபெறவுள்ளது. இந்த விரதத்தை முன்னிட்டு தம்பசிட்டி மலையந்தோட்டம் அருள்மிகு முரு கன் கோவிலில் இன்று புதன்கி ழமை முதல் விரத நாள்களில் மாலை 4.30 மணிக்கு விஷேட பூஜை வழி பாடுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ச-25,100)

★★★★

அத்தியடி அருள்மிகு பிள்ளையார் கோவிலில் இன்று புதன்கிழமை முதல் கந்தசஷ்டி விரத நாள்களில் மாலை 4.30 மணிக்குப் பூஜை வழி பாடுகள் இடம்பெறவுள்ளன. (ச-25,100)

★★★★

யாழ்ப்பாணம், ஒக்.22


நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் கந்த சஷ்டி உற்சவம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்குக் கொடியேற்றத்து டன் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வ ரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 12 மணிக்கு வேல் வழங்கலும், பி.ப. 3 மணிக்கு சூரசம்ஹாரமும் இடம்பெ றும். 28 ஆம் திகதி செவ்வாய்க்கி ழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை மாலை 6 மணிக்குத் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (ச-25, 17)

★★★★

பிரசித்திபெற்ற செல்வச்சந்நிதி ஆல யத்தில் கந்தசஷ்டி உற்சவம் இன்று புதன்கிழமை காலை அபிசேகத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 27 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சூரசங்ஹார உற் சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்குப் பாறணைப் பூசையும், மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (க-17)

## வெளிவந்தது கலைமுகம் 'அமுதமலர்'




யாழ்ப்பாணம், ஒக்.22

'கலைமுகம்' கலை இலக்கிய சமூக இதழின் 80 ஆவது இதழ் இரு நூறுக்கும் அதிகமான பக்கங்களு டன் அறுபதுக்கும் மேற்பட்ட படைப் பாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இதில் கலை இலக்கியம் ,நாடகம், ஓவியம்,சினிமா உட்பட பல்வேறு துறை சார்ந்த கட்டுரைகள், சிறு கதைகள், கவிதைகள், மொழிபெ யர்ப்புக் கவிதைகள்,மொழிபெயர்ப் புச் சிறுகதை,நூல் மதிப்பீடுகள், பத்தி என்பவை இடம்பெற்றுள்ளன. இதழின் மற்றுமொரு சிறப்பம்சமாக இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரி கையாளர்களில் ஒருவரான வீரகத்தி தனபாலசிங்கத்துடனான விரிவான நேர்காணலின் முதலாவது பகுதியும் வெளிவந்துள்ளது. (ச-25)

## ஐஸ் விற்பனை; இளைஞர் கைது

கொழும்பு,ஒக்.22

கருவாடு விற்பனை செய்யும் போர்வையில், ஐஸ் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர், தங்காலை பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவி னரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 22 கிராம் 280 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர். (க-இ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.22

சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர் காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் -28 கைதடி நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும் படை அம்மன் ஆலயத்தில் நாளைமறு தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோ திமுனிவர் குருபூஜையை அடுத்து மாண வர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப் புலவர் க.கயிலை வாசனின் "தண்ணீர் பந்தல் வைத்த படலம்" எனும் தலைப் பில் சொற்பொழிவும் இடம்பெறவுள் ளன. (ச-41)

துன்னாலை வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தில் தீபாவளி தினத்தன்று சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம் பெற்று, நரகாசூரன் வதம் இடம்பெற் றது. (க-17)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையில் மாணவர்கள் மற்றும் பெற்றோரால் கடந்த வியாழக்கிழமை ஆசிரியர்கள் கௌர விக்கப்பட்டனர். (ச-25)

பிளாஸ்ரிக் பாவனையால் ஏற்படக்கூடிய பாதிப்புப் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு புங்குடுதீவு மத்திய கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர்களால் இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச 25,9)



# அறிவுத் திருக்கோவில் அகவை நாள் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஒக்.22

பல்வேறு ஆன்மிக மற்றும் அறிவார்ந்த நிகழ்வுகளை நடத்துகின்ற யாழ்.அறிவுத் திருக்கோவிலின் ஒன்பதாவது அகவை நாளை முன்னிட்டு சிறப்புச் சிந்தனை உரை நிகழ்வு திருக்கோவிலின் தலைவர் மனவளக் கலைப் பேராசிரியர்.சி.முருகானந்தவேல் தலைமையில் அறிவுத்திருக்கோவில் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சொல்வேந்தர் சுகி.சிவம் "விஞ்ஞானமும் மெய்ஞானமும்" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆன்மிகத்துறையின் ஆளுமைமிக்க சிந்தனையாளர் சொல்வேந்தர் சுகி.சிவம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ச-25,66)

# கௌரி விரத காப்பு வழங்கல்

கேதாரகௌரி விரதத்தின் இறுதிநாளான காப்பு வழங்கும் நிகழ்வு திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தானத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.


விரதமிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேரிலும், வெளிநாடுகளில் வாழும் பக்தர்கள் பொதி சேவைகள் மூலமும் காப்பு நூல்களைப் பெற்றுக் கொண்டனர். (ச-25,50)





தருமபுரம் நெத்தலியாறு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் கௌரி விரதத்தின் இறுதிநாளான காப்புக் கட்டும் நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச-25,113)





இலங்கை சாரணர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் சாரணர் ஆசிரியர்களுக்கான இரு நாள் பயிற்சி யாழ்.மருத்துவமனைக் கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்றது. (ச-25, 17)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பணவீக்கம் உயர்வு

கொழும்பு, ஒக்.22
கடந்த செப்ரெம்பர் மாதத்துக்கான இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைக்குறியீட்டுக்கு அமைய மாதாந்திர நுகர்வோர் பணவீக்கம் உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2025 ஓகஸ்ட் மாதத்தில் 1.5% ஆக இருந்த நாட்டின் பணவீக்கம், 2025 செப்ரெம்பர் மாதத்தில் 2.1% ஆக அதிகரித்துள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் 2.9வீதமாக இருந்த உணவு வகையின் முதன்மைப் பணவீக்கம், 2025 செப்ரெம்பர் மாதத்தில் 3.8 வீதமாக அதிகரித்துள்ளது.

இதேபோல், 2025 ஓகஸ்ட் மாதத்தில் 0.4 வீதமாக இருந்த உணவு அல்லாத வகையின் முதன்மைப் பணவீக்கம், 2025 செப்ரெம்பர் மாதத்தில் 0.7 வீதமாக அதிகரித்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்

மண்ணில் 13 . 07 . 1965



விண்ணில் 20 . 10 . 2025

### மடுத்தீன் சிலுவராசா (கண்ணன்)

9ம் வட்டாரம் மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மடுத்தீன் சிலுவராசா (கண்ணன்) அவர்கள் கடந்த 20.10.2025 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மடுத்தீன் - ஞானப்பு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - மாகிறேட் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயமலர் அவர்களின் பாசமிகு கணவரும், ஜெயவினோதினி, ஜெயநிறோஜினி, சுபேக்கா (புது/பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்), சிநேகா (கலைப்பீட மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாதவன், நீகன் ஆகியோரின் மாமனாரும், டிலைக்ஷன், தானியா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செபமாலை (செல்லக்கிளி), தேவதாஸ் (அமெரிக்கா), புஸ்பராணி, அந்தோனிப்பிள்ளை (அன்ரன்), பிலோமினா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மேரிபுஸ்பம், தேவநேசம், அருட்தந்தை பத்திநாதர் (பங்குத்தந்தை கோப்பாய் திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருட்தந்தை துஷ்யந்தன் (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (22.10.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
077 958 0531

தகவல் :
அருட்தந்தை மடுத்தீன் பத்திநாதர்.

(CR 46148) A

## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 02 . 1966



உதிர்வு 21 . 10 . 2025

### திருமதி கலாநிதி பரராஜசிங்கம்

மடத்தடி கிழக்கு ஒழுங்கை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாநிதி பரராஜசிங்கம் அவர்கள் நேற்று (21.10.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தில்லையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பரராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சங்கீர்த்தனா (Tutor mentor-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சங்கவி (முகாமைத்துவ உதவியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமாரின் அன்பு மாமியாரும், கோகுலநிதி, தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2025) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி கிழக்கு ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 899 8943
077 585 4719

(CR 46150) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 07 . 1964



மறைவு 19 . 10 . 2025

### வேலுப்பிள்ளை பேரின்பநாயகம்

காரைநகர் களபூமி பாலாவோடையை பிறப்பிடமாகவும், 72/33 பணிக்கர் ஒழுங்கை திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பேரின்பநாயகம் அவர்கள் கடந்த (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரு வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவரான பரமநாதன் - பத்மாதேவி தம்பதியரின் மருமகனும், சிவஅம்பிகையின் கணவரும், சிவசங்கர், கஜமுகன் ஆகியோரின் தந்தையும், தனபாலசுந்தரம், மோகனாம்பிகை, லோகநாதன், குமாரலிங்கம், ராஜேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் சகோதரனும், சிவபாதசுந்தரம், சிவசோதி, சரோஜினிதேவி, தவமலர், ராசலட்சுமி, காலஞ்சென்ற தவநிதி மற்றும் கேதீஸ்வரி, விக்னேஸ்வரன், சிவகௌரி, சிவகங்கா, பவானி ஆகியோரின் மைத்துனரும், ஜெயமலர், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் ஆனந்தராசா, யோகதேவன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.10.2025) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கிரியைகள் நடைபெற்று காரைநகர் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

72/33 பணிக்கர் ஒழுங்கை
திருநெல்வேலி.
0772003429, 0773903255,
0772978388

தகவல்:
குடும்பத்தினர்

(CS/59691) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 02 . 1948



மறைவு 17 . 10 . 2025

### செல்லத்துரை இரத்தினபூபதி (பூமணி)

யாழ். காரைநகரை பிறப்பிடமாகவும், கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இரத்தினபூபதி (பூமணி) அவர்கள் கடந்த (17-10-2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், சண்முகம் செல்லத்துரை (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயகௌரி, மற்றும் மைதிலி, பாலசுப்பிரமணியம், செல்வரட்ணராஜா (ராஜன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவராஜா, கார்த்திகா, சிவகௌரி (விஜி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், இரத்தினம், நடேசு, மற்றும் மார்க்கண்டு, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பகவதி, பரிமளம், நாகம்மா (மணி), மற்றும் அருமைத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும், லக்ஷிகா - டானியல், ரதேஷ், பவன், பிரீத்தி, கவிதேஷ், கேஷிகன், மஞ்சரி, சப்தவி ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2025) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிரியை (Ceremony): 2pm to 4pm தகனம் (Cremation):4pm to 4:30pm
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB

தொடர்புகளுக்கு:
தவராஜா (மருமகன்) : +44 7984 438463
மைதிலி (மகள்) : +44 7539 053629
பாலா (மகன்) : +1 (613) 314-5701
கார்த்திகா (மருமகள்): +1 (613) 890-4379
ராஜன் (மகன்) : +44 7897 203862
விஜி (மருமகள்) : +44 7397 940833

தகவல்:
குடும்பத்தினர்

(CR/46145) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கமான என்பது
ஒரு நல்ல நிர்வாகியை
உருவாக்கும் ஒரு
வார்த்தை..

- லீ ஐயகோக்கா

புதன் பொய்கை

22.10.2025
புதன்கிழமை

அப்துல் அஸீஸ் அஸ்மா



# சீனடி சிலம்படி

## மறைந்துவரும் பாரம்பரியத்தை மீட்டுத் தக்கவைக்கும் முயற்சி

கிண்ணியாப் பிரதேசத்தின் பூவரசன் தீவில் வாழும் யுனூது அண்ணாவி, பாரம்பரியக் கலையாக விளங்கும் சீனடி சிலம்படியைத் தன்னுடைய வாழ்வின் ஒரு அங்கமாகக்கொண்டு வாழ்ந்து வருகிறார்.

இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரியத்தின் முரசங்களில் ஒன்றான சீனடிக்கலையின் தாயகம் திருகோணமலை மாவட்டத்தில் தோணாக்கடலைக் கிழக்காயும், வடக்கே முத்துக்கடலையும், தெற்கே மகாவலியையும் எல்லையாகக் கொண்ட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட எழில்மிகு தேசம் கிண்ணியாவாகும். இந்தக் கலை, ஒரு காலத்தில் தற்காப்புக் கலை வடிவாக சமூகத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இதனை உண்மையான பாரம்பரியத்தோடு பேணி வருபவர்கள் மிகக் குறைவு. அத்தகைய சிலருள் முன்னணியில் திகழ்பவர் யுனூது அண்ணாவி. அவரிடம் இந்தக் கலையின் வரலாற்றுப் பின்னணியைப் பற்றி பேச வாய்ப்புக் கிடைத்தது. 'சீனடி சிலம்படி என்பது வெறும் சண்டைக் கலை அல்ல. அது ஒழுக்கம், தன்னடக்கம், மன அமைதி ஆகியவற்றைக் கற்றுத்தரும் ஒரு வாழ்க்கை வழி' என்று அவர் தொடங்கினார்.



**கேள்வி:** சீனடி சிலம்படிக் கலை தொடர்பில் கூறுங்கள்?

**பதில்:** சீனடி சிலம்படி என்பது ஒரு தற்காப்புக் கலை. சண்டை செய்வதற்காக இதை பயன்படுத்துவது அந்தக் கலையை அவமதிப்பதாகும். சீனடி சிலம்படியில் பல வகையான அடிமானங்கள் உள்ளன. ஒவ்வொரு அடியிலும் பல வகையான அடிமானங்கள் உண்டு மற்றும் ஒவ்வொன்றும் தனித்தனி பயனையும் பொருளையும் உடையன. இவற்றில் முதன்மையானது குரு வணக்கச் சுவடு, இது 'சலாம் வரிசை' என்றும் அழைக்கப்படுகிறது. குருவிற்கும் கலைக்கும் மரியாதை செலுத்தும் முதல் நிலை இதுவாகும்.



இரண்டாவது, நிலைச் சுவடு அல்லது கழுத்துப் பிடி நிலைச்சுவடு. இது உடலின் சமநிலையைப் பேணிக்கொள்ளும் அடிமுறை ஆகும். மூன்றாவது, தொண்டைக் குழி நிலைச் சுவடு. இதில் இடது காலை அசைக்காமல் ஒரே இடத்தில் இருந்து தற்காப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நான்காவது, கெண்டைக்கால் பிடி நிலச் சுவடு, அல்லது அமத்து நிலைச் சுவடு. இது எதிரியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வித்தை எனக் கூறப்படுகிறது. யுனூது அண்ணாவியாரின் மாணவர்கள் இவ்வாறான பல அடிமுறைகளை என்முன் நிகழ்த்திக் காட்டியபோது, ஒவ்வொரு அசைவிலும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் பிரதிபலித்தது. 'எனது மாணவர்கள் அனைவரும் தற்காப்புக்காக மட்டுமே இதைப் பயில்வார்கள். சண்டைக்கு இதைப் பயன்படுத்தமாட்டார்கள் என்பதில் அவர்கள் சத்தியப்பிரமாணம் எடுக்கிறார்கள்' என்று அவர் பெருமையாகக் கூறினார்.

### அன்றும் இன்றும்

**கேள்வி:** அக்காலத்தில் சீனடி சிலம்படிக் கலை பின்பற்றப்பட்ட முறைக்கும் தற்போதைய முறைக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

**பதில்:** எங்கள் முன்னோர்கள் கம்புவை வானில் சுற்றி வீசும் அளவுக்கு நுட்பமாகப் பயிற்சி பெற்றிருந்தனர். இன்று அந்தக் கம்பின் நீளம் குறைந்துவிட்டது. பயிற்சியின் ஆழமும் குறைந்துவிட்டது. வாள்வீச்சு இப்போது காட்சிப் பொருளாக மட்டுமே உள்ளது. முன்னோர் காலத்தில் வாள்வீச்சு சடங்குகள், காப்புக் கலையாகவும், போர் முன் மரபாகவும் இடம்பெற்றன. ஆனால் தற்போது அதனைப் பாதுகாப்பு காரணங்களால் நிறுத்தியுள்ளனர். இதனால் வாளின் அசைவுகள், மடங்கல்கள், எதிர்ப்புகள் போன்ற முக்கியமான அம்சங்கள் மறைந்து வருகின்றன. அதுபோல், ஒவ்வொரு அடிமுறையும் குருவின் வழிகாட்டுதலோடு செய்யப்பட வேண்டும் என்ற ஒழுங்கும் இன்று பின்பற்றப்படுவதில்லை. முன்னோர் காலத்தில் குரு அனுமதி இல்லாமல் ஒருவரும் அடியிட மாட்டார்கள். ஆனால் இன்று இணையத்தில் கற்றுக் கொள்வோர் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. அவர்கள் கலையின் ஆன்மாவைத் தொட்டுப் பார்க்கவில்லை. இக்கலை பழங்காலத்தில் திருமண விழாக்கள், வைகாசித் திருவிழாக்கள், மற்றும் கிராம மக்களின் பொது நிகழ்ச்சிகளில் பெருமையாகக் காட்சியளிக்கப் பட்டது. ஆனால் இன்று அத்தகைய மேடைகள் இல்லாமலே, சிலம்பம் அரங்கக் கலையாக மட்டும் தள்ளப்பட்டு வருகிறது. இதனால் அது ஒரு சமூகக் கலையிலிருந்து தனிநபர் திறனாக மட்டுமே மாறியுள்ளது.

**கேள்வி:** சீனடி சிலம்படி கலையைக் கற்றுக்கொள்வதற்கு தற்போதைய இளைஞர்கள் ஆர்வத்துடன் உள்ளனரா?


**பதில்:** இப்போது சீனடி சிலம்படி கற்றுக்கொள்ள வரும் மாணவர்கள் அதிகம் இல்லை. கற்றவர்களில் சிலர் அதை முறையாகப் பயிற்சி செய்யாமல், போட்டி அல்லது புகைப்படத்துக்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இதுவே கலையின் வீழ்ச்சிக்குக் காரணம். முன்னோர் போல கம்பு வீச்சு அல்லது வாள்வீச்சு கற்றுக் கொள்ளும் இடங்கள் இப்போது இல்லை. பழைய அண்ணாவிமார்கள் மரணமடைந்ததால் அவர்களின் நுட்பங்கள் மறைந்து விட்டன. எனவே, இக்கலையின் உண்மையான உயிரோடு நிற்கும் வடிவம் இன்று காண்பது அரிது. எனவே, நான் இக்கலையை உயிரோடு வைத்திருக்கப் பாடுபடுகிறேன். இது என் குருவின் ஆசீர்வாதமும் என் வாழ்க்கையின் நோக்கமும் ஆகும்.

**கேள்வி:** தற்காப்புக் கலைகளின் எதிர்காலம் தொடர்பில் கூறமுடியுமா?

**பதில்:** நான் ஏற்கனவே கூறியதைப்போன்று, சண்டைக்காக இதைக் கற்பிக்கமாட்டேன்; இது கற்றவைகளைத் தவறாக பயன்படுத்தினால் கலையின் மதிப்பு கெட்டுப் போகும். கலைக்கான நுட்பங்களை ஆவணப்படுத்தல் அவசியம்; வீடியோ பதிவு, எழுத்து குறிப்புகள், மற்றும் கிராமக் குழுக்களில் சிற்றூழிய நிகழ்ச்சிகள் மூலம் பரப்ப வேண்டும். மாவட்ட அல்லது ஊருக்குள் பள்ளிக் கொள்ளைச் சீர்திறன் நிகழ்ச்சிகளில் சிலம்பத்தை கலாசாரப் பாடமாக சேர்க்கும் முயற்சி அவசியம்.

யுனூது அண்ணாவி போன்ற கலைஞர்கள் இன்னும் இத்தகைய மரபைத் தாங்கி நிற்கிறார்கள். ஆனால் அவர்கள் கூறுவதுபோல், அவர்களுக்குப் பின்னர் இந்தக் கலைகளை யார் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லவுள்ளனர் என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாக ஆகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ நந்தன்

# மாண்புமிகு மக்கள் சேவையாளர் நீர்வேலி சண்முகவடிவேல்

வலிகாமம் கிழக்கு நீர்வேலிப் பிரதேசத்தில் பல ஆண்டுகளாகக் கிராம அலுவலராகப் பணியாற்றி, மக்கள் சேவைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர் சுப்பிரமணியம் சண்முகவடிவேல். அவருக்கான மணி விழா பிரதேச மக்களின் ஏற்பாட்டில் மிகவும் சிறப்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

சண்முகவடிவேல் தனது 38 வருட சேவைக் காலத்தையும் முழுமையாக மக்களுக்காக அர்பணித்து சேவையாற்றினார். இவர் ஆன்மிக சிந்தனைகளிலும் சிறந்து விளங்கினார். சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை அனைவரது அன்புக்கும் உரியவரானார். கண்ணியமாக உரிய நேரத்தில் மக்களுக்கான சேவைகளை வழங்கினார். நேர்மையாக சேவை புரியும் அவர் ஒரு நடமாடும் கிராம சேவையாளராக தன்னை மாற்றிக்கொண்டார்.

தனது பிரிவிலுள்ள வறுமைக்குட்பட்டவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், விதவைகள், வயோதிபர்கள் என அனைவருக்கும் தேடிச்சென்று சேவை வழங்கினார். அலுவலகத்தில் இருந்துகொண்டு மட்டும் தான் சேவையாற்றவேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இவரிடம் இருந்ததில்லை. அனைவரையும் பாராமுகம் பார்க்காமல் சமமாகக் கருதும் இவரின் குணம் மதிக்கத்தக்கதாகும்.

நீர்வேலி சண்முகவடிவேல் தனது ஆரம்பக் கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்.இந்துக் கல்லூரியிலும் கற்றார். மக்கள் சேவைக்குள் நுழைந்த பின் கோப்பாய், அச்செழு, நீர்வேலி, வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் சேவையாற்றினார்.

இவரது புனிதமான சேவை கல்வியியலாளர்கள், அறிஞர்கள், அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் பெரிதும் உதவியாக இருந்தது. இவரைப்போன்று ஏனைய கிராம சேவையாளர்களும் செயற்படவேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். கிராம சேவையாளர்களின் அர்ப்பணிப்பான சேவையாலேயே அந்தக் கிராமம் வளர்ச்சியடையும்.

அந்தவகையில் சண்முகவடிவேல் தான் சேவையாற்றிய கிராமங்களில் ஒரு சிறந்த சேவை வரலாற்றை உருவாக்கியுள்ளார் என்று சொன்னால் மிகையாகாது. இப்படியான சிறந்த மக்கள் சேவையாளன் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தனது சேவையால் மக்கள் மனங்களை வெல்ல வேண்டும். ■

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




# பாடசாலைப் பாடவிதானத்தில் பாலியல் கல்வியின் அவசியம்

■ றஜனி பாலசுப்பிரமணியம்

இலங்கையைப் பொறுத்தவரையில் இன்றைய காலகட்டத்தில் பாலியல் கல்வியானது சிறுவர்களுக்கும் சரி, கட்டிளமைப் பருவத்தினருக்கும் சரி, பெரியவர்களுக்கும் சரி அவசியமானதொன்றென கல்வியியல், மானிடவியல், உளவியல், சமூகவியல் சிந்தனையுள்ளவர்களால் கூறப்பட்டு வருகிறது.

பாலியல் என்றால் என்ன? எனப் பார்க்குமிடத்து ஆணோ, பெண்ணோ தன்னுடைய இனத்தின் சிந்தனைகள், உணர்வுகள் கலந்த தன்மையை வெளிப்படுத்துவதாகும். இதனைப் பால் + இயல் எனப் பிரித்து நோக்கலாம். பால் என்பது ஆண், பெண் என்ற இரு வேறுபட்ட உடல், உள அமைப்பைக் கொண்ட தன்மையாகும். இயல் என்பது செயற்பாட்டு இயக்கம் எனக் குறிப்பிடலாம். இந்த வகையில் பாலியல் கல்வி என்பது ஒரு மனிதன் இனப்பெருக்கம் சார்ந்த மாற்றங்களையும், உணர்வுகளையும், உடலியல் மாற்றங்களையும் புரிந்து அறிந்துகொண்டு தன்னளவில் தெளிவு பெறவும் விளங்கிக்கொள்வதற்காகவும் வழங்கப்படும் அறிவே பாலியல் கல்வியாகும்.




இன்று உலகம் முழுவதும் 15 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள் வளரிளம் பருவத்திலேயே அதிகம் கருத்தரிப்பதாக சர்வதேசப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இதற்கு முதன்மைக் காரணமாக அமைவது பாலியல் பற்றிய தெளிவான புரிதலின்மையும் கல்வியின்மையுமே ஆகும். பாலியல் கல்வி என்பது வெறுமனே உடலுறவை மட்டும் மையமாகக் கொண்டதல்ல. இந்த வகையில் நோக்கும்போது பாடசாலைகளில் பாலியல் கல்வி அவசியம்தானா? என்ற கேள்வி நீண்ட காலமாக நிலவி வருகின்றது. எனினும் மேலைத்தேய நாடுகளில் இவை பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன. முறைசார் கல்வியின் வழியில் மாணவர்களுக்கு நன்னெறிகளைக் கற்றுத்தந்து அவர்களை நல்லவர்களாக ஆக்கும்பணி பாடசாலையைச் சார்ந்ததாகும். அந்தவகையில் முறைசார் கல்வியைத் தரும் ஒரேயொரு நிறுவனமான பாடசாலையில் இருந்தே அர்த்தமுள்ளதும் கட்டாயமானதுமான கல்வியைப் பெறுகின்றனர். அவையே முழுமையான தன்மையை மாணவர்களுக்குத் தரத்தக்கனவாகும்.

**பாலியல் கல்வியின் நன்மை**

பாடசாலைகளில் பாலியல் கல்வியைக் கற்பதன்மூலம் சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகங்களில் இருந்து தப்பிப்பதற்கு வாய்ப்புக்கள் எழுகின்றன. தற்போது பாடசாலைகளில் பாலியல் கல்வி கற்பிக்கவேண்டியதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது. ஒரு சமூகத்தின் நலனுக்காக பாலியல் நடத்தைகள், குழந்தைகள் பாலியல் உதாசீனம் செய்தல், பாலியல் நோய்கள் என்பன பற்றிய அறிவினை மாணவர்களுக்கு அறிய வைக்க பாலியல் கல்வி முக்கியமானது.

திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகள் உண்டு. அறமும் பொருளும் மட்டுமே வாழ்க்கையல்ல என்பதால் தான் வள்ளுவர் காமத்துப் பாலை இயற்றினார். ஆனால் காமத்துப்பாலின் ஒரு குறள்கூட பாடப் புத்தகங்களில் இடம்பெறவில்லை. இதுவே உண்மையாகும்.

சிறுவர் திருமணம், பதின்ம வயதுப் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் இலங்கை சிக்கல்களை காண்கின்றது. இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கருவுற்ற தாய்மார்களில் அதிகமானோர் பதின்ம வயதினரெனத் தெரியவருகின்றது. இதற்குக் காரணம் என்ன என நோக்கின் இப்பாலியல் கல்வி சரியான முறையில் சென்றடையாமையே ஆகும். இன்று எத்தனையோ பாடசாலை மாணவ, மாணவிகள் பாலியல் தொந்தரவுக்குள்ளாகி உளநலம் குன்றியவர்களாகவும் தம் வாழ்வைப் பறிகொடுத்தவர்களாகவும் திருமண வாழ்க்கையை வெறுத்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.


பெற்றோர், ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்காத இது போன்ற விடயங்களினை சினிமா, பத்திரிகை, இணையத்தளம், நண்பர்கள் போன்றவை சொல்லிக்கொடுக்கும் போது பிள்ளைகள் தவறான நடத்தைக்குச் செல்ல வழி ஏற்படுகின்றது. பாலியல்கல்வி என்பதனுள்ளே நமது சட்டங்கள் பற்றிய அம்சங்களும் அமையப் பெறவேண்டும். அப்போதுதான் அக்கல்வி முழுமையடையும். பாலியல் ரீதியான குற்றங்களுக்கு என்ன வகையான தண்டனைகள் மற்றும் தன்னை பாலியல் துன்புறுத்தல் செய்யும் நபர்களை சட்டப்படி எப்படி தண்டிக்கமுடியும்? இதுவரை பாலியல் அடிப்படையிலான குற்றங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள தண்டனைகள் என்னென்ன? போன்ற விடயங்களையும் தெளிவுபடுத்தினால் எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவது குறைக்கப்படும்.

பாடசாலையில் ஏனைய கல்வி போன்று பாலியல் கல்வியும் எப்போது முறையான கட்டமைப்பின்கீழ் கற்பிக்கப்படுகின்றதோ, அப்போதுதான் எமது சமுதாயம் ஒழுக்கமுள்ளதாக மாற்றம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை கோட்டை






■ ஜனுக் ஷி ஸ்ரீகாந்தன்

## பேணிப் பாதுகாக்கவேண்டிய தொன்மம்!

யாழ்ப்பாண வரலாற்றில் கி.பி. 1658ஆம் ஆண்டு தொடக்கம் 1796ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இக்காலத்தில் ஐரோப்பிய இனத்தவரில் ஒருவரான ஒல்லாந்தர் கைகளில் யாழ்ப்பாணம் உள்வாங்கப்பட்டது. இதன் வெளிப்பாட்டினை ஒல்லாந்தர் கால சிதிலங்கள் மூலமாகவும், புரட்டஸ்தாந்து மதம் பெற்ற செல்வாக்கினை அவர்களின் தேவாலயங்களின் ஊடாகவும் அறிந்துகொள்ள முடிகிறது.

இலங்கையின் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் மூன்று முக்கியமான நிர்வாக மையங்களுள் ஒன்றாக 'மொமாண்டறி' காணப்பட்டது. ஒல்லாந்தரின் வரலாற்றுச் சின்னங்களை உடுவில், சுண்டிக்குளி, அச்சுவேலி, உடுப்பிட்டி, யாழ்ப்பாணக் கோட்டை போன்ற இடங்களிலுள்ள தேவாலயங்கள் மூலமாகவும் அறியமுடிகின்றது. இவை அனைத்திலும் முக்கியமான வரலாற்றுச் சின்னமாக அமைந்ததுதான் சங்கானைத் தேவாலயம். 350 வருடங்களை கடந்த நிலையில் ஒல்லாந்தரின் ஆட்சியின் விளைவினை உறுதிப்படுத்தும் வரலாற்றுச் சின்னமாகக் காணப்படுகின்றது. இதைத்தான் தற்போது சங்கானைக் கோட்டை என அழைக்கின்றனர்.

ஒல்லாந்தக் கட்டிடக்கலை மரபைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. முருங்கை கற்களான முன் வளைவைக் (பிறை போன்ற அமைப்பு) கொண்ட பகுதியுடன் தொடர்ந்து நீள் சதுர வடிவிலான முன் மண்டபத்தையும் கொண்டுள்ளது. இவை ஒல்லாந்தருடைய காலத்தின் கலை தொழில்நுட்பத்தினை வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன.

கூரையின் மேலிருந்து உள் மண்டபத்திற்குள் மழைநீர் உட்புகாதவாறு சிறப்பான முறையில் அந்தக் காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. உள் மண்டபத்திற்குச் செல்லும் நுழைவாயில் ஒல்லாந்தர் கால கலைமரபுக்கு ஏற்ப உள் மண்டபத்தில் இரண்டு ஜன்னல்களையும், வெளி மண்டபத்தில் ஒன்பது ஜன்னல்களினையும் கொண்டமைந்துள்ளது.


இன்றைய நிலையைப் பார்த்தால் தேவாலயம் 42 மீற்றர் நீளமும், 12 மீற்றர் அகலமும் கொண்ட 5 பரப்பு காணியில் கட்டப்பட்டுள்ளது. போர்த்துக்கேயரால் இது நிர்மாணிக்கப்பட்டதாக காணப்பட்டாலும் அதன் பின் வந்த ஒல்லாந்தர்களினால் தமது மதம், கலைமரபிற்கு ஏற்ற வகையிலாக அமைப்புக்கள் மாற்றியமைக்கப்பட்டதாக இதுபற்றி ஆராய்ந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்கதான இந்த இடம் தேவாலயமாகவும், பாடசாலையாகவும், போர்த்துக்கேயர் குதிரைகளைக்கட்டி வளர்ப்பதற்கான இடமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தேவாலய மத குருவிற்குரிய வீடமைந்திருந்த கட்டட அத்திபாரங்கள் சிதைவடைந்த நிலையில் இன்றும் காணப்படுகின்றன. அன்றைய காலனித்துவ ஆட்சியின் போது பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்களுக்கு சான்றாகவும் இதனைப் பார்க்கலாம்.

அந்நியக் கலையான ஒல்லாந்தக்கலை மரபினை பிரதிபலித்து நிற்கின்ற வகையிலும் பல நூற்றாண்டுகளைக் கடந்தும் ஒல்லாந்தரின் யாழ்ப்பாண ஆட்சியையும் புரட்டஸ்தாந்து மதம் பெற்ற செல்வாக்கையும் நிலை நிறுத்தும் முக்கியமான பண்பாட்டுச் சின்னமாகவும் இது அமைகின்றது .

தொல்லியல் திணைக்களத்தால், கடந்த 2007ஆம் ஆண்டில் இது சான்றுப்படுத்தப்பட்ட போதிலும், இன்றளவும் அதைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் விளைவாக அது படிப்படியாக அழிவடைந்து வருகின்றது. அத்துடன், கலாசாச்சார சீரழிவு இடம்பெறும் பகுதியாகவும் தற்போது அது மாறி வருகின்றது. இந்த நிலை மாற்றப்பட்டு, அந்தத் தேவாலயம் உரியமுறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பதே அந்தப் பகுதி மக்களின் கருத்தாக அமைந்துள்ளது.

வரலாற்றுச் சின்னங்களை அழியாது பாதுகாத்து எமக்கு அடுத்துவரும் தலைமுறையினருக்குக் கையளிக்கவேண்டியது எமது கடமையே!





# சக்திவாய்ந்த கந்தசஷ்டி விரதம்

ஐப்பசி மாத வளர்பிறையில் அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதல் சஷ்டி திதி வரையான ஆறு நாள்கள் கந்தசஷ்டி விரதம் கந்தப்பெருமானுக்கு அனுஷ்டிக்கப்படுகிறது.

கந்தப்பெருமான் சூரபத்மனைத் தலைவனாகக் கொண்ட அசுரப் படையை வாட்டி அழித்த திருவிளையாடல்தான் கந்தசஷ்டி விரதமாகவும் விழாவாகவும் அனுஷ்டித்துக் கொண்டாடப்படுகிறது. பரமேஸ்வரனுக்கும் பார்வதிதேவிக்கும் குமாரனாக உதித்த முருகப்பெருமான் தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பம் செய்த சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் போன்ற கொடிய அசுரத் தலைவர்களையும், அசுர குலத்தையும் ஆறுநாள் போரில் அடக்கி ஒடுக்கி சம்ஹாரம் செய்தார். வேலினால் சூரபத்மனைப் பிளந்த முருகப்பெருமான் அவனின் ஒரு பகுதியை மயில் வாகனமாகவும், மற்றொரு பகுதியை சேவற்கொடியாகவும் தமதாக்கி ஆட்கொண்டு தேவலோகத்தைக் காத்தருளினார். உலகினிலே ஜீவராசிகளுக்கும் தாயாய், தந்தையாய், இறைவனாய் இருந்து பரிபாலிக்கும் கந்தவேள் யாரை அழிப்பது? யாரைக்காப்பது? மறக்கருணையால் அசுரர்களின் அசுர இயல்பை அழித்து தேவ இயல்புடன் அவர்களை ஆட்கொண்ட திருவிளையாடலே சூரசம்ஹாரம் பிளக்கப் பிளக்க முளைத்த சூரன் ஈற்றில் கடலில் மாமரமாக வளர்ந்து நின்றான். கடலிலே மாமரமாக நின்ற சூரனைக் கந்தப்பெருமான் சஷ்டியில் அறுத்தார் என்பது பிறவிதோறும் முளைத்த அவனது "ஆணவத்தை அழித்து அவனை ஆட்கொண்டார் என்பதே சூரசம்ஹாரத்தின் ஊடாக சொல்லப்படும் கருத்தாகும்.

நாம் உடம்பைப் பெற்றது இறைவனை வணங்கி முத்தியடைவதற்கே என்பது ஆன்றோர் மொழியாகும். கந்தசஷ்டி விரதம் முருகப்பெருமானுக்குரிய விரதங்களுள் முதன்மையானதாகும். இதை முறைப்படி அனுஷ்டிப்போர் மற்ற எல்லா விரதங்களையும் நோற்ற பலனைப் பெறுவர் என்பது ஆன்றோர் அனுபவ வாக்குக் கந்தசஷ்டி விரதம் ஆறுநாள்களை உள்ளடக்கியது. ஆறு நாள்களும் முழு விரதமிருப்போர் பூரண உபவாசமிருந்து ஏழாம் நாள் காலை பாரணை பண்ணுவர்.

அவ்வாறு அனுஷ்டிக்க இயலாதவர்கள் தம்தேக மனநிலைக்கு ஏற்ப திரிகரண சுத்தியுடன் இயன்ற மட்டும் அனுஷ்டிக்க வேண்டியதுதான். மனச்சுத்தமும், ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் முக்கியமானவை.

இந்த விரதநாள்களில் கந்தஷ்டிக் கவசம், கந்தர் கலிவெண்பா, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், சண்முக கவசம் ஆகியவற்றில் மனதுக்கு உகந்த பாடல்களைப் பாடி கந்தப்பெருமானின் பேரருளைப் பெற்று உய்யலாம்.

மதுரகவி. காரை. எம்.பி. அருளாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு



வாழ்க்கையின் கனவு நோக்கிச்
செல்லும் வழியினில் எரிந்திடும்!

சிவப்பு நிறத்து
வெளிச்சத்தின் அருகில்
மௌனமாகி உறைந்திடும் …

வெள்ளைப் பெண்கள்
சிவப்பு நிறத்து கொண்டைகள் …

அணிந்து பட்டிகளைக் கழுத்துகளில்
பெண்கள் இருந்தனர் பலர்
பார்க்கின்ற இடங்களில் எல்லாம் …

சிவப்பு நிறத்தை வெள்ளையாக்கி
உலகினை பலப்படுத்தினாலும்
புண்ணிய நிலத்தின் கதவு மூடப்படும்
தீட்டுக்கு அகப்பட்டு …

மாதத்தில் கடினமான சிவப்பு நிறத்து நாளில்
சிவப்பு இலக்கங்கள் இல்லாத
நாட்காட்டியைப் பொறுத்துக் கொள்ளல் …

குடும்பத்தைத் தோள்மீது
சுமந்துகொண்டு வேலைக்குச் செல்கின்ற
பெண்கள் அருகில்
விழுந்ததே
தாமதத்திற்கு
சிவப்புக் கோடு!



சிங்களத்தில் - சாமிகா முணசிங்ஹ
தமிழில் - இப்னு அஸுமத்

# செம்மணியின் கண்மணிகளே….



நீங்கள்
புதைந்தவர்களல்ல
புதைக்கப்பட்டவர்கள்.
வீழ்ந்தவர்களல்ல
வீழ்த்தப்பட்டவர்கள்.

கட்டியணைத்த குழந்தையும்
மொட்டவிழ்ந்த மலர்களும்
பச்சிளம் பள்ளிச் சிறுவர்களும்
கச்சிதமாய் புதைக்கப்பட்டீர்களே.

எம் தேசம் இதுவென்று
இறுமாப்புடன் இருந்தோமே
உமதல்ல, எம்தேசமென்று
கெக்கலித்து மகிழ்ந்தார்களே.

கனவுகளைப் பொய்யாக்கி
உறவுகளைத் தனியாக்கி
உயிர்ப்பின் மூச்சி ழந்து
ஊமை ரணங்கள் ஆக்கினரே.

இருநூறுகளைக் கடந்திட்ட
எலும்புக்கூடுகளின் எச்சங்களே
உங்கள் அழுகுரல்கள்
நிலமாதை முத்தமிட்டு
நீண்டொலிக்கின்றன.

கையாலாகாதவர்களாய் நாம்
காத்திருக்கிறோம் நீதிக்காய்.
செம்மணியின் கண்மணிகளே
காலக்கணக்கில் நாம்
கனதியை வாசிக்கிறோம்.

திருமதி.கிருஷ்ணவேணி சிங்கராஜன்



# எழுத்தே என் துயரத்தின் வடிகால்

■ அம்சன் கிருஸ்ணா

யாழ்ப்பாண மண், சொந்தக் கலைஞர்களின் குரலாலும் படைப்புகளாலும் எப்போதும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. கலை, இலக்கியம், இசை, ஊடகம், கல்வி எனப் பல துறைகளில் சிறந்து விளங்கிய படைப்பாளிகளை ஈழத்தாய் உலகுக்கு அரிய முத்துகளாகத் தந்துள்ளாள். அந்த அரிய முத்துக்களுள், ஜனகமகள் சிவஞானம் என்ற புனைபெயரில் எழுத்துத் துறையில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றவர் சீதாலட்சுமி ஆவார். வானொலியிலிருந்து தொடங்கி பத்திரிகைகள் வரை பரந்த அவருடைய எழுத்துப்பயணம், பெண்களை மையமாகக் கொண்ட சமூகச் சிந்தனைகளையும் வாழ்க்கை அனுபவங்களையும் வெளிப்படுத்தும் தனிச்சிறப்பினால் வாசகர்களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கிறார். வானொலியின் 'இசையும் கதையும்' நிகழ்ச்சியின் ஊடாகவே நேயர்களிடையே பெரும் பிரபலத்தைப் பெற்ற அவர், நூற்றுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களுடன், சிறுகதைகள் மற்றும் குறுநாவல்களையும் படைத்துள்ளார். அவருடனான நேர்காணலே இது.

**கேள்வி :** உங்கள் எழுத்துப்பயணம் எப்போது தொடங்கியது?
**பதில் :** நான் 1975ஆம் ஆண்டு ஜனகமகள் சிவஞானம் என்ற புனைபெயரில் எழுத்துத்துறையில் பிரவேசித்தேன். முதன்முதலில் என் ஆக்கங்களை வானொலிக்கே எழுதினேன்.

**கேள்வி :** வானொலி நாடகங்களுக்கு கதை எழுதத் தொடங்கியதன் உந்துசக்தி என்ன?
**பதில் :** அப்போது பெண்களுக்கு வெளியில் செல்ல அதிக வாய்ப்புகள் இல்லை. நான் வீட்டிலேயே இருந்தபோது, வானொலி கேட்பது, புத்தகம், வாசிப்பது என்பதே எனது பொழுதுபோக்காக இருந்தது. இதனால் வானொலிக்கு எழுதவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் எழுந்தது.

**கேள்வி :** உங்களது வானொலி நாடகங்கள் அதிகம் எதைப்பற்றி பேசுகின்றன?
**பதில் :** நான் எழுதிய அனைத்து நாடகங்களும் பெண்களை மையமாகக் கொண்டவை. நாங்கள் வாழ்ந்த காலகட்டத்தில் பெண்கள் அனுபவித்த துன்பங்கள், சீதனக் கொடுமைகள், முதிர்கன்னிகளாக சந்தித்த சிரமங்கள் என பல பிரச்சினைகள் இருந்தன. எனவே பெண்களைப் பிரதிபலிக்கும் கதைகள் எழுதுவது எனது இலக்காக இருந்தது.

**கேள்வி :** எழுத்து உங்கள் வாழ்க்கையில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தியது?
**பதில் :** நான் எனது 17ஆவது வயதில் திடீரென தந்தையாரை இழந்தேன். அந்தத் துயரத்திலிருந்து என்னை மீட்டெடுக்க எழுத்துத்துறை மட்டும் உதவியது. எழுத்துகள் எனக்கு வழிகாட்டி, வடிகாலாக இருந்தன.


**கேள்வி :** உங்கள் படைப்புகள் வெளியுலகுக்கு எப்படி அறிமுகமாயின?
**பதில் :** தெரிந்துகொள்ளாத என்னை வெளியுலகுக்கு எழுத்துத் துறைதான் அறிமுகப்படுத்தியது. பலரிடமிருந்து என் எழுத்துகளுக்குப் பாராட்டுகள் குவிந்தன, அது எனக்கு மிகப் பெரிய உற்சாகம் அளித்தது.

**கேள்வி :** நீங்கள் எழுதிய படைப்புகளில் உங்களுக்கு மிகவும் பிடித்த படைப்பு எது?
**பதில் :** எனக்கு மிகவும் பிடித்த படைப்பு 'உதய சங்கமம்' தொடர் நாடகம். இது 15 வாரங்கள் தொடர்ந்து வானொலியில் ஒலிபரப்பாகி, நேயர்கள் ஒவ்வொரு வாரமும் முடிவு என்னவாக இருக்கும் என எதிர்பார்த்து கேட்டனர்.

**கேள்வி :** உங்கள் எழுத்துகளின் சிறப்பம்சம் என்ன?
**பதில்:** என் எழுத்துகள் எல்லாம் எளிய மொழியில், அனைவரும் புரிந்துகொள்ளக்கூடியவையாக இருக்கின்றன. இதுவே என் படைப்புகளின் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர்களின் எதிர்காலத்துக்கு சிறந்த அடித்தளம் இடுங்கள்!

வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.22

**சிறுவர்களை இலக்காகக் கொண்டு போதைப்பொருள் வலைப்பின்னல் உருவாக்கப்படுகின்றது. எனவே அவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாப்பாக மீட்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சர்வதேச சிறுவர் தின நிகழ்வு, கிளிநொச்சி பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். சிறுவர்கள் மீதான முதலீடு, சிறப்பான எதிர்கால நாட்டுக்கான அடித்தளமாகும்.

சிறுவர்களுக்கு உடல், உள ரீதியான தண்டனைகள் வழங்கப்படக் கூடாது. சிறுவர்களுக்குத் தீங்கான எதையும் நாம் முன்னெடுக்கக் கூடாது. கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் பெற்றோரை இழந்த சிறுவர்கள் இருந்தனர். இன்றும் விபத்துகளால் பெற்றோரை இழந்து அநாதரவான நிலைமைக்கு சிறுவர்கள் தள்ளப்படுகின்றனர். எந்தவொரு சிறுவர்களுக்கும் ஆதரவில்லாத நிலைமை வரக்கூடாது. அவர்களின் எதிர்காலம் பாதிக்க அனுமதிக்க முடியாது. மாகாணத் திணைக்களம், சிறுவர் இல்லங்களைக் கண்காணித்து, சகல சிறுவர்களையும் அரவணைத்து அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டும்- என்றார். (க-இ)

## மின்னல் வேகத்தில் பஸ்; அச்சத்தில் பயணிகள்!

யாழ்ப்பாணம்,ஒக்.22

வீதி விதிமுறைகளையும் மீறி, வேகமாகப் பயணித்த பேருந்தால் அதிலிருந்த பயணிகள் அச்சத்தில் நிலைதடுமாறினர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பேருந்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பேருந்து புதுக்காட்டுக்கும், பளைக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதிச் சமிக்ஞைகளைப் பின்பற்றாது, மிகவும் வேகமாகப் பயணித்தது. இதன்போது அபாயகரமான திருப்பத்தில் சென்ற இரண்டு கார்களை முந்திச் சென்றது.

குறித்த திருப்பத்தில் தொடர் வெள்ளைக்கோடு காணப்பட்ட நிலையில், அதனைப் பொருட்படுத்தாது, மிகவும் வேகமாக வலது பக்கத்தால் பல வாகனங்களைப் பேருந்து முந்திச் சென்றது.

இதனால் வீதியில் பயணித்தவர்களும், பேருந்தில் பயணித்தவர்களும் அச்சத்தின் மத்தியில் பயணம் மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-27)



## தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலான முன்மொழிவு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் ஆசிரிய ஆளணிச் சீராக்கம், ஆசிரியர்கள் தொடர்பான தரவுகள் அதிகாரிகளிடம் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படாமை, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-25,27,66)



## மரக்கறி விலை எகிறும்

கொழும்பு,ஒக்.22

இலங்கையில் தற்போது நிலவும் மோசமான வானிலை காரணமாக எதிர்வரும் நாள்களில் காய்கறி விலைகள் அதிகரிக்கக் கூடும் என்று மெனிங் சந்தை வட்டாரம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக பெய்து வரும் கனமழையால் பயிர்ச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் வரும் வாரங்களில் காய்கறி விலைகள் உயரலாம்.

ஒரு கிலோ கரட் ரூ.100, முட்டைக்கோஸ் ரூ.50, தக்காளி ரூ.100, குடைமிளகாய் ரூ.300, பீன்ஸ் ரூ.150 முதல் ரூ.200, பச்சை மிளகாய் ரூ.250 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## பெரமுன மீது வீண்பழி; சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு,ஒக்.22

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் உட்பட கட்சியை இழிவுபடுத்தும் நோக்கில், திட்டமிட்ட முறையில் பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பசன் கஸ்தூரி பெர்னாண்டோ தெரிவிக்கையில், தவறான தகவல்கள் முதன்மையாக சமூக ஊடகங்கள் மூலம் பரவிவருகின்றது. போதைப் பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களைக் கைதுசெய்ய வழிவகுத்த பொலிஸ் நடவடிக்கைகளால் இது இன்னும் தீவிரம டைந்துள்ளது.

சில குழுக்கள் சந்தேகநபர்களை எமது கட்சியுடன்பொய்யாகதொடர்புபடுத்தி, விசாரணைகளை அரசியலாக்க முயற்சிக்கின்றனர்.

பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கொலைவழக்கின், சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி கைதுசெய்யப்பட்ட பின்னர், கூடுதலான வதந்திகள் பரப்பப்படுகின்றன.

பெரமுனவைக் குற்றச்செயல்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு கட்சியாக சித்திரிக்கவேண்டுமென்றே முயற்சி நடக்கின்றது. கடந்த காலங்களில் இதேபோன்ற கூற்றுகள், எந்தவொரு துணை ஆதாரமும் இல்லாமல் சட்டபூர்வமாக சவால் செய்யப்பட்டன. இந்த விடயத்தில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டும்- என்றார். (க-இ)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகருக்கு எதிராக விரைவில்

எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.22

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெகுவிரைவில் கையளிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி அஜித் பி பெரேரா எம்.பி. தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. அது முடிவடைந்த பின்னர் தர்க்க ரீதியாக பிரேரணை முன்வைக்கப்படும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தமை உட்பட மேலும் சில காரணங்களை அடிப்படையாகக்கொண்டே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



வரலாற்றுச் சிறப்புமிக்க சாவகச்சேரி நகர் புராதன தான்தோன்றி வாரிவனேஸ்வரர் ஆலயத்தில் கேதார கௌரிவிரத பூஜை வழிபாடுகளில் நேற்று பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு விரதத்தை பக்திபூர்வமாக நிறைவு செய்தனர். (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அஸ்வெசும' உதவி கோரும் 43 இலட்சம் குடும்பங்கள்!

கொழும்பு, ஒக்.22

இலங்கையின் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 52 இலட்சமாக இருக்கும் நிலையில் இதில் 43 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்துள்ளன என அமைச்சர் உபாலி பன்னல தெரிவித்துள்ளார்.

கடந்த 2024ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 43 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்காக விண்ணப்பம் செய்துள்ளன. இலங்கையில் பெரும்பாலானவர்கள் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற மனநிலையில் வாழ்ந்து வருகின்றனர். அரசியலில் நிலவி வந்த ஒரு கலாசாரமும் இவ்வாறு மக்கள் உதவி பெறும் நிலைக்குத் தள்ளப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இந்த நிலைமைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் அது இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதில் பெரும் நெருக்கடிகளை உருவாக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விசா ஆலோசனை நிறுவனத்திற்கு பெண் பணியாளர்கள் தேவை. ஆங்கிலம் மற்றும் கணனி அறிவுடைய பெண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-

071 175 5665

(CS/59696) J-1

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வழங்குநர்களை பதிவு செய்தல் 2026

எமது சபையினால் 2026 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தங்களை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருட்கள்

01. காகிதாதிகள் எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்கள்
08. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின்வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள்
12. எரிபொருள், உராய்வு நீக்கி
13. இரும்புப் பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள் ,சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமி நாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

சேவைகள்

01. அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
06. மின்சாதனங்களின் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணினி பிரதியாக்கல், இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை

மேற்படி விண்ணப்பமானது ஒவ்வொரு பொருட்கள் மற்றும் வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் Pachchilaipalli.ps.gov.lk இணையத்தளத்திலும் மற்றும் தலைமையலுவலக முகப்பு அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் குறித்த சேவைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற போது ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பபடிவக் கட்டணமாக ரூபா.1000.00 உம் ஒவ்வொரு பொருட்கள் மற்றும் வழங்கல் சேவைக்குமான பதிவுக் கட்டணமாக ரூபா.1000.00 (வரிகள் நீங்கலாக ) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2026" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசாளர், தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பபடிவங்கள் 31.12.2025 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 024 -3243544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

# விலகியவர்கள் ஒன்றிணைவு

பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற ஆதரவாளர்கள் மீண்டும் கட்சியை நோக்கி வர ஆரம்பித்துள்ளனர். இதன்மூலம் கட்சி வலுவடைந்துவருகின்றது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியானது 3 சதவீதமாகவே இருந்தது. எனினும், அது 69 இலட்சமாக அதிகரித்தது. அதாவது ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுனவுக்குரிய 66 இலட்சம் வாக்குகளே தேசிய மக்கள் சக்திக்குச் சென்றடைந்தன.

ஆனால் தற்போது ஆதரவாளர்கள் கட்சியை நோக்கி வருகின்றனர். கிராமிய மட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பலமடைந்துவருகின்றது. 2029 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய அறிவிப்பைக் கட்சி விடுக்காது எனவும் யாப்பா அபேவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (ச-44)

## பெயர் மாற்றம்

இல.12, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **ஜொனி வ்ரின்டன்** ஆகிய நான் எனது பெயரை **ஜொனி ஃபிரிங்டன் மாட்டினஸ்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஜொனி ஃபிரிங்டன் மாட்டினஸ்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**ஜொனி ஃபிரிங்டன் மாட்டினஸ்**

(CS 59693) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில், தெரிவுசெய்யப்பட்ட 26 குடும்பங் களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மொத்தமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்கள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ச-25,66)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக ஏற்பாட்டில் "பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தல்" தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் பளை மத்திய கல்லூரி மற்றும் மாசார் அ.த.க.பாடசா லைகளில் நடத்தப்பட்டன. நிகழ்வில் வளவாளராகப் பிரதேச உளவளத்துணை உத்தியோகத்தர் தி.பிரியா கலந்துகொண்டார். (ச-41-9)



தீபாவளியை முன்னிட்டு, பொரளை புதிய மகசின் சிறைச்சாலைத் தமிழ்க்கைதிகளுக்கு, அகில இலங்கை இந்துமாமன்ற சமூக நலன் சேவைக் குழுவினரால், உணவு உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்பட்டன. (க-66)

## போதனா...

கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டை நடத்தியது.

மருத்துவமனையில் கடமையில் இருந்த 3 மருத்துவர்கள், இரு தாதியர்கள், மேற்பார்வையாளர் உட்பட 21 மருத்துவ சேவையாளர்களும், மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த 47நோயாளர்களுமாக மொத்தம் 68 பேர் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்உள்ளநினைவிடத்தில் நடைபெற்றது. கொல்லப்பட்டவர்களின் உருவப்படங்களுக்கு முதலில் மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவுச் சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் எனப்பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் நோயாளர்களுக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன. (அ-எ-26-66)

## கிருமித்தொற்றால்...

மனையில் பிறந்த இந்த சிசு, காய்ச்சலுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தது. சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்தபோதும் சிசு உயிரிழந்தது. மூளையில் ஏற்பட்ட கிருமித்தொற்றே இறப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## தவறான...

தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீயிட்டுக் கொண்டார். தீக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துமவனையில் இவர் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## வடக்கில்...

நாட்டின் கிழக்கே ஏற்பட்ட வளிமண்டல குழப்ப நிலைமை தற்போது தாழமுக்கமாக மாற்றமடைந்துள்ளது. அது தொடர்ந்தும் வலுவடைந்து இலங்கைக்கு அருகில் வடமேற்கு நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் வடக்கு மற்றும் மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மாகாணங்களிலும், அநுராதபுரம் மாவட்டத்திலும் இன்று கனமழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வரை 976.82 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. நெடுந்தீவு மற்றும் அச்சுவேலியில் நேற்றுக் காலை 8 மணிவரையான தகவல்களின் அடிப்படையில் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதேநேரம் நேற்று தொண்டைமானாறு பகுதியில் அதிகளவான மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது என்று தெரியவருகின்றது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்காலவானிலை அறிவிப்புகள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-எ-26)

## மேயர்,...

உறுப்பினர்களான க.பிரேமதாஸ் மற்றும் சு.விஜயகுமார் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் இந்த இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சு.விஜயகுமார் தேசிய மக்கள் சக்தியின் சார்பிலும், க.பிரேமதாஸ் சுயேச்சையாகவும் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தெரிவானவர்கள்.

மனுவில் பிரதிவாதிகளாக ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சு.காண்டீபன், ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் ப.கார்த்தீபன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வவுனியா மாநகரசபையின் முதல்வர் பிரதிமுதல்வர் தெரிவின்போது பிரதிவாதிகள் சட்டத்துக்கு முரணான வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பிரதி முதல்வர் ப.கார்த்தீபன் மாநகரசபை எல்லைக்குள் வசிக்காத ஒருவராக உள்ளார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் அந்தப் பதவிகளை வகிப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் பதவிகளை செல்லுபடியற்றதாக்கக் கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் மனுமீதான விசாரணைகள் முடிவடையும்வரை முதல்வர், பிரதிமுதல்வர் ஆகியோர் அந்த பதவிகளை வகிப்பதற்கு இடைக்காலத் தடை உத்தரவை நேற்று வழங்கியது. மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் முன்னிலையாகியிருந்தார். (அ-எ-110)

## மருத்துவமனை...

நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாகவும் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, அவர்களின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு, நினைவுச்சுடரும் ஏற்றப்பட்டது. இந்த நினைவேந்தல் நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர். (அ-எ-27)

## இராணுவ...

மான முறையில் இராணுவ மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. காணி உரிமையாளரின் கோரிக்கையை அடுத்து தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும்வடமாகாணசபை அவைத் தலைவருமான சி.வீ.கே சிவஞானம் மற்றும் வலி.வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் காணி உரிமையாளருடன் காணி அமைந்துள்ள பகுதிக்கு நேற்று நேரில் சென்று , உயர் பாதுகாப்பு வலய எல்லையுடன் நின்று, மருத்துவமனையின் கட்டட வேலைகளை அவதானித்தனர்.

காணி உரிமையாளருடன் கலந்துரையாடிய எம்.ஏ.சுமந்திரன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் மருத்துவமனைக் கட்டுமானத்துக்கு எதிராக மிக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார். (அ-எ-26)

## இஷாராவுடன்...

கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் வூட்லர் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுத் தலைவரான கணேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இஷாரா செவ்வந்தி தேடப்பட்டுவந்த நிலையில், அவர் தலைமறைவாகியிருந்தார். அண்மையில் இவர் நேபாளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டார்.

அவரிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அவருடன் தொடர்புகளைப் பேணிய பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இஷாரா செவ்வந்தி நாட்டில் தலைமறைவாகியிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலும் தலைமறைவாகியிருந்தார் என்று கூறப்படும் நிலையில், அது தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இஷரா செவ்வந்திக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த குற்றச்சாட்டில் ஏற்கனவே சிலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இஷாரா செவ்வந்தியுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

## விசேட...

கள் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள்கள், சாராயம், 48 போத்தல் கசிப்பு, கசிப்புக் காய்ச்சுவதற்கான உபகரணங்கள், கோடா போன்றவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 11 பேர் மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பொலிஸாரின் விசேட நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-26-28)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு குழுக்களுக்கிடையில் மோதல்: பல்கலை மாணவர்களுக்குத் தடை

கொழும்பு, ஒக்.22
ருஹுணு பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களை மறு அறிவித்தல் வரும் வரை, உடனடியாக பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுப் போட்டியின் புள்ளிகள் தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மோதல் ஏற்பட்டுள்ளது.
மோதலில் 6 மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## நல்லூர் ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 22
பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் கந்தசஷ்டி உற்சவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சிறப்பு பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
தொடர்ந்து காலை 10 மணிக்கு காலைச் சாந்தி பூஜையும், 10.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெறும்.
மாலை 3.45 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், 4.15 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும். எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை சூரன்போரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (ச-25, 17)


## கட்டிடம் வாடகைக்கு

அரியாலை சந்தி (A9 வீதி) யூதா கோவில் வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள 1000 சதுர அடி கடையும், இணைந்த குளியலறையுடன் கூடிய 200 சதுர அடி அறையும் மேலதிகமாக ஒரு களிப்பறையும் கொண்ட கட்டிடம் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், அலுவலகங்கள் போன்றன விரும்பப்படும்.
மாலை 05.00 மணிக்கு பின் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு:-
077 606 2944
(CS/59685) J-1

## பிளம்பர் தேவை

யாழ்ப்பாணத்தில் நாட்கூலி அடிப்படையில் பிளம்பிங் வேலை செய்யக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை
தொடர்பு: 076 653 3814
(CR 46136) E

## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.


| | |
|---|---|
| தென்மராட்சி | 50,000/= |
| யாழ். மாவட்டம் | 55,000/= |
| வடமராட்சி | 55,000/= |

விநியோகிக்கப்படும்.
மற்றும்
கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டுத் தரப்படும்.
தொடர்புகளுக்கு:
077 057 0337

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு
"O" குருதிவகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
ஆண், பெண் இருபாலாரும்.
HLA Report இருப்பின்
Whatsapp பண்ணவும்.
076 540 6732 (Whatsapp/ Call)
077 656 0222
(CS/59694) J-1


## மரண அறிவித்தல்



### ஐயாத்துரை கணேசலிங்கம்

(ஆனந்தி V.A.K)

தோற்றம் 27.05.1944 — மறைவு 20.10.2025

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கணேசலிங்கம் கடந்த (20.10.2025) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - முத்தாபரணம் தம்பதியரின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், தர்சிகா, துஷாந்தன் (ஜேர்மனி), சுஜீலன் (இலங்கை மின்சார சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தன் (Work Superintendent Jaffna University), பிரியசாந்தி (ஜேர்மனி), தாரணி (இலங்கை மின்சார சபை) ஆகியோரின் மாமனாரும், தர்சனன், சயனுஜன், கனுசன், சர்யுன், அஸ்மிதா, ஹர்ணிகா, ஆருஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி, காலஞ்சென்ற முத்துலிங்கம், மற்றும் மகாதேவன், மனோன்மணி, விமலாதேவி ஆகியோரின் சகோதரனும், ஜெயரூபன், சசிகரன், ஐங்கரன், ஜெகதீஸ்வரி, ஜெயலட்சுமி, கலைச்செல்வி, ரஜனி, ரஞ்சனா, காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், ஜெகசோதி ஆகியோரின் அத்தானும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.10.2025) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

தகவல்
குடும்பத்தினர்

(CS 59692) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org